DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -5

| | | |
|---|---|---|
| Name | : சதீஷ்குமார் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 8th day of April 2025

Accused present.

**முதல் விசாரணை** :–

நான் தற்போது சூரமங்கலம், ஜாகீர் சின்ன அம்மாபாளைத்தில் குடியிருக்கிறேன். இறந்துபோன செல்வகுமார் எனது அக்கா கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இவர் தான் எனது மாமா செல்வகுமாரை அடித்தார். கடந்த 23.12.2017 அன்று நான் அக்கா வீட்டிற்கு அழகாபுரத்திற்கு சென்றேன். நான் மாலை 4 மணிக்கு அக்காவீட்டிற்கு சென்றேன். எனது அக்கா மாமாவிடம் பணம் வாங்குவதற்காக அழகாபுரம் ரோட்டில் நின்று கொண்டிருந்தார். என் மாமா எதிரில் கொஞ்ச தூரம் தள்ளி நின்றுகொண்டிருந்தார்.

ரோட்டிற்கு எதிரியில் எதிரியும் அவரது மனைவியும் சண்டை போட்டுகொண்டிருந்தார்கள். தெரிந்தவர் என்பதால் என் மாமா தடுப்பதற்காக சென்றார். அங்குபேசிகொண்டிருந்தார். அபபோது நீ யாருடா தடுப்பதற்கு தேவிடியா பையா என்று சொல்லி கட்டையால் ஓங்கி தலையில் அடித்துவிட்டார். இரண்டவது அடியை என் மாமா கையால் தடுத்தார். நாங்கள் துாரத்திலிருந்து பார்த்துவிட்டு மாமா சத்தம் போடுகிறார் என்று ஓடினோம். ஓடியபோது மறுபடியும் தேவிடியா பையா கொல்லாமல்

விடமாட்டேன் என்று என் மாமாவை பார்த்து எதிரி சொன்னார். மறுபடியும் என் மாமாவை கட்டையால் தலையில் அடித்துவிட்டார். என் மாமாவிற்கு தலையில் இருந்து ரத்தம் வந்தது நாங்கள் சென்று என் மாமாவை பிடித்துகொண்டோம். எதிரி எங்களை பார்த்த உடன் கட்டையை தூக்கிகொண்டு ஓடிவிட்டார். அதன் பின்பு ஒரு ஆட்டோ கூட்டி வந்து எஸ்கே.எஸ் மருத்துவமனை சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றோம். அவருக்கு பெரிய காயம் ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். அதனால் நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். மறுநான் வலி அதிகாமாக உள்ளது என்று சொன்னதால் என் மாமாவைஐஸ்வர்யம் மருத்துவமனைக்கு அழைத்து சென்று இ.சி.சி எடுத்துபார்த்தோம்.

எனது மாமா அபாயகட்டத்தில் இருந்தார். அங்கு சிகிச்சைக்கு சேர்த்தால் அதிக செலவாகும் என்று சொன்னார்கள். பணம் கையில் இல்லை அதனால் என் மாமாவை வீட்டிற்கு அழைத்து வந்தேன். மறுநாள் பக்கத்தில் இருந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மறுபடியும் என் மாமா அதிகமாக வலி இருப்பதாக சொன்னதால் எனது மாமாவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். என் அக்கா துணி எடுத்துவர வீட்டிற்கு சென்றார். நான் அரசு மருத்துவமனையில் இருந்தேன். டீ குடிப்பதற்காக நானும், எனது மாமா பரமேஸ்வரனும் வெளியில் சென்றோம் கூட்டமாக இருந்ததால் என் மாமா செல்வகுமார் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டார்.

பக்கத்தில் இருந்த மருத்துவமனையில் என் மாமாசெல்வகுமார் சிகிச்சை பெற்றுகொண்டிருந்தார். மறுநாள் காலையில் என் மாமா தலை அதிகமாக வலிக்கிறது என்று வாந்தி எடுத்துவிட்டார். மறுபடியும் என் மாமாவை அரசு மருத்துவமனைக்கு என் அக்கா அழைத்து சென்றார். என் மாமா அபாயகட்டத்தில் இருப்பதாக சொல்லி அவரை மருத்துவமனையில் ICU வில் வைத்துவிட்டார்கள். அதன் பின்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். என் மாமாவால் பேசமுடியாததால் என் அக்கா தான் புகார் கொடுத்ததார். போலிசார் என் அக்காவை விசாரித்தார்கள்.

மாலை சுமார் 5 மணிக்கு சம்பவ இடத்தை காண்பிக்கும்படி போலிசார் என்னை அழைத்தார்கள். நான் அழகாபுரம் சென்று சம்பவ இடத்தை போலிசாருக்கு காண்பித்தேன். போலிசார் அங்கு விசாரணை செய்தார்கள். 31.12.2017 அன்று காலை 10.05 அல்லது 10.10 க்கு செல்வகுமார் மருத்துவமனையில்இறந்துவிட்டதாக என் அக்கா தகவல் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஜாகீர்சின்ன அம்மாபாளையத்தில் பிறந்தது முதல் வசிக்கிறேன். நான் 15 வருடமாக கொத்தனார் வேலை செய்கிறேன் . பொதுவாக காலை 10 மணிக்கு வேலைக்கு சென்றால் மாலை 6 மணிக்கு தான் வருவேன் என்றால் சரிதான். என் அக்காவிற்கும், செல்வகுமாருக்கும் தகராறு ஏற்பட்டு என் அக்கா செல்வகுமாரை பிரிந்து சென்னையில் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. எனது அக்கா சென்னையில் தனியாக வேலை செய்துகொண்டு அங்கேயே வசித்து வந்தார் என்றால் சரியல்ல.

எனது அக்காவீடு மெயின்ரோட்டிலிருந்து தெற்கு அழகாபுரம் வழியாக சென்று பின்பு கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் சாலையில் உள்ளது என்று சொன்னால் மெயின் ரோட்டிலிருந்து பார்த்தால் வீடு தெரியும். மெயின்ரோட்டிலிருந்து பார்த்தால் வீடு தெரியும் என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நானும், என் அக்காவும் வீட்டிலிருந்து பேசினோம் என்றால் சரியல்ல ரோட்டிலிருந்து பேசிகொண்டிருந்தோம். மேற்படி விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் மேற்படி விவரத்தை சொல்லாமல் தற்போது தான் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

என் மாமா ஆட்டோவை நிறுத்திருந்த இடம் ஆட்டோ ஸ்டேண்ட் இல்லை. சம்பவ இடத்திற்கும், எனது மாமா வீட்டிற்கும் 500 அ டி துாரம் இருக்கும் என்றால் சரியல்ல 100 அடி துாரம் இருக்கும். எதிரி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. அவர் நன்றாகத்தான் இருக்கிறார். நாங்கள் வழியில் வந்த

ஆட்டோவை பிடித்து மருத்துவமனைக்கு சென்ற விவரத்தை புலன்விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். நான் மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எஸ்கே.எஸ் மருத்துவமனைக்கு அழகாபுரம் காவல்நிலையம் வழியாகத்தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் அழகாபுரம் காவல்நிலையத்திற்கும் ½ கி.மீ இருக்கும் என்றால் சரிதான். எஸ்கே.எஸ் மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவர் என்ன நடந்தது என்று என்னிடமும், செல்வகுமாரிடம் கேட்டார் என்றால் சரிதான்.

எதிரியில் இருப்பவர் அடித்துவிட்டதாக மருத்துவரிடம் சொன்னோம். பின்னிட்டு ஐஸ்வர்யம் மருத்துவமனைக்கு சென்றபோதும் தலையில் எப்படி காயம் ஏற்பட்டது என்று விவரத்தை சொன்னோம். முதல்முதல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது பரமேஸ்வரன், நான், எனது அக்கா சென்றோம். முதல் முதல் சிசிக்சைக்கு சென்றபோது நானும், எனது அக்காவும் செல்லவில்லை என்றும் செல்வகுமாரின் மகன் தான் அவரை சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. 23.12.2017 அன்று அடையாளம் தெரிந்த நபர்கள் 3 பேர் தாக்கியதாக சொல்லி செல்வகுமாரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

அதன் பின்பு தகவல் தெரிந்து என் அக்கா சென்னையிலிருந்து வந்து மறுபடியும் 28.12.2017 அன்று செல்வகுமாரை சிகிச்சையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் வந்து போலிசார் வந்து விசாரித்தபோது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்ற சொன்னால் என்னை விசாரித்தார்கள் ஆனால் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது அக்கா கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.